தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 27.] MADRAS:—SUNDAY JULY, 3, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

பூதவிசாரணை.	பிள்ளையார்பிடிக்கக்குரங்கான [து.
பிரார்த்தனை.	வர்த்தமானசங்கிரகம்.
இந்துசமயசாரவிளக்கம்.	நோட்டீஸ்.

அறிக்கை

சந்தாக்களையும், பத்திரிகைவேண்டி
எழுதிக்கொள்ளுங்கடிதங்களையும்
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிராஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரைக்குநேராய்
அனுப்பவேண்டும்; அனுப்பாவிட்டால், பத்திரிகை
கிடைக்கமாட்டாது.

விளம்பரம்.

சென்னைமாநகரம் இராயபுரம் அரத்தூன்வீதி மேலண்டைவாடை முதலாவது கதவிலக்கமுள்ள வீட்டில் வித்துவான் வே. கி. நாராயணசாமி பிள்ளையவர்களியற்றிய செய்யுட்டிரட்டு - புத்தகம் ஒன்றுக்கு விலை அணு 8 - கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். 12 - புத்தகமொத்தமாகக் கேட்போருக்கு 1 - புத்தகம் ஆதாயமாகக்கொடுக்கப்படும்.

ஒரு பிரசங்கியார் எவ்வெவ்விடத்தில் எவ்வெவ்வித பிரசங்கஞ் செய்தபோதிலும், ஆங்காங்கு, நாஸ்திகம் விர்த்தியாகிவருகிறதென்றும், உலகம் கேடடைவதற்கு இது அறிகுறியாயிருக்கிறதென்றும் முறையிட்டுக்கொண்டுவருகிறார். இதுவரையில் ஆஸ்திகத்தாலடைந்த கேட்டைப்பார்க்கினும் நாஸ்திகத்தாலடைந்ததென்னையோ? நாஸ்திகத்தாலல்லவா கொஞ்சங் கொஞ்சமாய்ச் சீர்ப்பட்டு வருகிறது. சிலநாளுக்கு முன்னே ஒரு பத்திரிகையில், சிந்தாத்திரிப் பேட்டையிலே ஒரு நாஸ்திகனுக்கும் மந்திரவாதியாகிய ஒரு ஆஸ்திகனுக்கும் வாதமுண்டாகி, அந்த மந்திரவாதி ஒரு கடிதாசியில் பென்சிலினாலே தேளுருவமெழுதி, அவன்சொன்னபடி அந்தத்தேளின் கொடுக்கினிடத்து நாஸ்திகன் கைவைக்கவே, விஷமேறி அவஸ்தைப்பட்டு நாஸ்திகன் ஆஸ்திகனானனென்று எழுதியிருந்தது. அதை வாசித்த யாம், "இது பழங்கதை," ஆஸ்திகரானவருடைய பெயரையும் இருப்பிடத்தையும் விளங்கச் சொன்னால் அவரைக்கண்டு வார்த்தையாடி தெளிவுற்று யாமும் ஆஸ்திகராவோமென்று எழுதினோம்; இதற்கு மறுமொழி யொன்றுங் கிடைக்கப் பெற்றிலேம். ஆஸ்திகர் நாஸ்திக ராவதற்கு இவ்வித அத்தாட்சி வேண்டுவதில்லை. மேற்படி புராணிகராகிய ஆஸ்திகரோ ஒப்புக்கொள்ளுவதுமன்றி, ஆஸ்திகரென்பேரில் அனேகர் மனதில் நாஸ்திகராகவேயிருப்பதும் பலருக்குத்தெரியும். அன்றியும், இதற்கு ருசுவாக, எல்லாம் சங்கிரமஜாதியாகி நாஸ்திகம் மேலிடுமென்று ஆஸ்திகருடைய பாரத பாகவதங்களில் சொல்லியிருப்பது உண்மையென நம்புகிறவர்கள் தங்கள் மனதைத் தேற்றிக்கொள்ளவேண்டியதேயன்றி, அதைத்தடுக்க முயலுவார்களாகில் வீண் பிரயத்தனமாய் முடியுமல்லவா? இவ்வுண்மையை யறிந்த மேற்படி புராணிகர் முதலாயினோர் தங்கள் பெரியோர்கள் வாக்குக்கு மாறாக நடக்க முயலாமல் நாஸ்திகராவதே முறைமை. பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்கிற பிரமாணத்தை ஸ்தாபித்த கலிலியோ என்னும் விருத்தரை குருக்கள்மார்கள் அதிக உபத்திரவப்படுத்தி, அவர் சொன்னது பொய், பூமி சுற்றிவருகிற தில்லையென்று சொல்லும்படி செய்தபின்பு, அவர் எழுந்துபோகையில், வழியிலே நின்றிருந்தவர்களோடு, நான் இல்லையென்று சொன்னபோதிலும், சுற்றுகிறது சுற்றிக்கொண்டுதானிருக்குமென்று சொல்லிப்போயினர். அதுபோல, ஆஸ்திகர்கள் எவ்வளவு தலைகீழாகப்பட்டபோதிலும், ஐரோப்பா சாஸ்திரங்களை வாசிக்கவாசிக்க, நாஸ்திகம் விர்த்தியாவது ஆய்க்கொண்டுதான் வரும்.

———0———

பூ த வி சா ர ணை.

பிரபஞ்சத்தின் இலட்சணத்தையும் அதனதுபிரகிருதியாயப்பிரமாணங்களையும் உணராமல் பதிசாத்திரங்களை ஆராயத்தொடங்குதல் பயனில்லாதசெய்கை என்பதற்குச்சிறிதேனும் ஐயமில்லை. இப்பிரபஞ்சவுண்மைகளை இலக்கணயுக்தமாயறிவதற்கு பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்களை வகுத்துப்பேசவேண்டியிருக்கின்றதென்பது சகலருக்குந் தெரிந்தவிஷயமே. பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்கள்யாவும் பூதங்களும் பூதகலப்புகளுமா யிருக்கின்றனவென்பதை அடிக்கடி கேட்டிருக்கின்றோமாகையால், பூதங்களின்சுபாவம் இன்னதென்றும், அவைகளின் இலக்கணமின்னதென்றும் அறிதல் மானிடர்க்கு இன்றியமையாக்கடமையாயிருக்கின்றது.

பூதமென்னுஞ்சொல்லுக்குப் பற்பல பொருள்களுண்டு. இச்சொல் பலபொருள்குறித்த ஒருசொல்லாயினும் நாம்பிரயோகிக்கும் சந்தர்ப்பத்தில்பூதமென்னுஞ்சொல்லுக்கு எதிர்மொழி பௌதிகம். பௌதிகமென்றால் பூதங்களாலுண்டானது. பூதமென்னுஞ்சொல்லுக்குரிய பொருளை நாம் மூலபாஷையினின்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட வோர்நூலிற்கண்டவாறே யுரைப்போம்.—"பூதமானது வெவ்வேறுவிதமான பற்பல சுபாவகுணங்களைக் கொண்டிருக்கிறதுமாய் அதினுடைய அம்ஸங்களைக் கெடுக்கத்தக்கதாக எத்தனை பிரயாசைப்பட்டாலும் முன்னிருந்த அந்தகுணங்களை எப்போதும்போலவே சுவகரித்துக்கொண்டிருக்கிற பொருளுமாய் இருப்பதுதான் பூதமென்றுசொல்லப்படும். அதெப்படியென்றால், தண்ணீரென்று சொல்லப்படுகிற பூதமானது நெருப்பினுடைய உஷ்ணத்தினாலே யெத்தனைபிரிந்துபோனாலும், அதினுடைய அம்சங்களெல்லாம் மறுபடியுங்கூடி யெப்போதும்போலே தண்ணீராய்ப்போம்." இப்பூத இலக்கணத்தைப்பற்றி பின்னர் சந்தர்ப்பம் நேரிட்டவிடத்து வியவகரிப்பாம்.

சாதாரணமாய் பூதங்களைந்தெனப்படுகின்றன: அவை பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசம். பிரிதிவு என்பது பூமி, அல்லது மண். அப்பு என்பது ஜலம், அல்லது தண்ணீர். தேயு என்பது நெருப்பு, அல்லது காங்கை. வாயு என்பது காற்று. ஆகாசம் என்பது வெளி. சிலர் பூதங்களை நான்காகக் கொள்கின்றனர். அவை, பிரிதிவு, அப்பு, தேயு, வாயு. இனி நாம பொதுவாய் பூதங்களின் குணலட்சணங்களைக் காட்டுவோம். அவ்வாறு காட்டியபிறகு நம்மாலங்கிகரிக்கப்பட்ட பூதங்களித்தனையென்றும், அவைகளின்னவையென்றும் இலட்சணயுத்தமாய் கூறுவோம். பூதங்களின்குணங்களைக் கூறவேண்டியிருத்தலின் ஒவ்வொரு பூதத்துக்குரிய குணங்களின் தொகையை இங்குவிளக்குவாம். ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்திருக்கும் ஓர் நூலில் பூதத்திற்குரிய குணங்களின் தொகையைச் சொல்லியிருக்கிறவாறே இங்கு உரைப்போம். அது யாதெனின், "ஆகாயத்திற்குக்குணம் ஒன்று; வாயுவிற்குக்குணம் இரண்டு; தேயுவிற்குக்குணம் மூன்று; அப்புவிற்குக்குணம் நான்கு; பிரிதிவுக்குக்குணம் ஐந்து" என்பதே.

ஒவ்வொரு பூதத்திற்கும் குணங்களிருக்கின்றபடியாலும், குணங்களையுடையது பதார்த்தங்களாதலாலும், இத்தேசத்து சாத்திரிகளால் கூறப்பட்ட பஞ்சபூதங்களும் குணங்களையுடைய பதார்த்தங்களென்றாகிறது. இனி பூதங்களுக்குரிய குணங்கள் இன்னதெனவிசாரிப்பாம். அக்குணங்களைப்பற்றி பின்வருமாறு ஸமஸ்கிருதநூல்களில் மொழிந்திருக்கின்றன. "பிரதித்தொனியொன்றும ஆகாயத்தின்குணம்; சீறுசீறென்றடிக்கிற சத்தமும், சீதோஷ்ணமாகவருகிற பரிசமும், வாயுவின்குணம்; பகபகவென்று சொலிக்குஞ்சத்தமும், சுடுகிற பரிசமும், பிரவையென்கிறரூபமும், அக்கினியின்குணம்; கள

களவென்கிற சத்தமும், குளிர்ந்தபரிசமும், சுக்கிலரூபமும், மதுராசமும்,அப்புவின்குணம்; கடகடவென்கிறசத்தமும்,கடினபரிசமும், பஞ்சவன்னரூபமும், அறுசுவைரசமும், நற்கந்தம், துற்கந்தமும், பிரிதிவின்குணம்." இக்குணங்களை நன்குவிளங்கக்கூறுவது ஆவசியகம். ஆகாயத்திற்கு சப்தமாகியகுணம் ஒன்றே; வாயுவிற்கு ஸப்தம், ஸ்பரிசம் ஆகிய குணங்களிரண்டு; தேயுவிற்கு ஸப்தம், ஸ்பரிசம், ரூபம் ஆகிய குணங்கள் மூன்று; அப்புவிற்கு ஸப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம் ஆகிய குணங்கள்நான்கு; பிரிதிவிற்கு ஸப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம, கந்தம் ஆகிய குணங்களைந்து. இனி பதார்த்தங்களின்னவையென்றும் அவைகளை நாமறியும்வித மின்னதென்றும் விளக்குவாம்·

பதார்த்தங்களை நாம் பஞ்சேந்திரியங்களால் உணருகிறோம். பஞ்சேந்திரியங்களாவன மெய், வாய், கண் மூக்கு, செவி என்பவைகளே. பஞ்சேந்திரியங்களெனினும், ஐம்புலன்களெனினும், ஐம்பொறிகளெனினும் ஒக்கும். பஞ்சேந்திரியசேட்டை அல்லது தொழில் அறிவெனப்படுகின்றது. இந்த அறிவு ஐந்துவகைப்படும், அவை, பார்த்தல், கேட்டல், முகர்தல், உருசித்தல், பரிசித்தல். அறிவானது பதார்த்தங்களிவையென்றும் அவற்றின் குணங்களிவையென்றும் மனமானது அறிந்து நிச்சயிக்கத்தக்கமூலமும் துணைக்கருவியுமாயிருக்கிற புலன்களின் தருமமே. இந்திரியங்கள்வழியாய் பிரபஞ்சத்திலுள்ள பதார்தங்களை சீவசெந்துக்களறியவேண்டி யிருக்கின்றபடியால், இந்திரியச்சேட்டை யெதற்கில்லையோ அதற்கு பிரபஞ்சவுணர்ச்சியில்லை;

இ-மு.

பிரார்த்தனை·

(98-வது பக்கத் தொடர்ச்சி.)

பிரபஞ்சத்தில் நடந்தேறிவரும் ஒவ்வொரு சம்பவமும் அதற்கு முன் நடந்த சம்பவங்களை ஒட்டித் தொடர்ந்தே வருமென்றும், அச்சம்பவங்களைப் பின்னோக்கிப் பார்க்குங்கால், ஒன்றற்கொன்று காரணகாரிய சம்பந்தத்தில் இணைபிரியாமல் படிப்படி நமது கியானத்திற்கு அப்பாற்படுமென்றும் சாத்திரங்கள் போதிக்கின்றன. முன்னடந்த காரண சம்பவங்களை யொட்டியே பின்னடக்கும் காரிய சம்பவம் விளைவது பிரபஞ்ச ஒழுங்காம்: இப்பிரபஞ்ச ஒழுக்கத்தை ஒட்டியே காலக்கிரமப்படி குளிர்வாடை வீசும் பருவத்தில் குளிர் வாடை வீசுவதும், பனிமழை பெய்யும் பருவத்திற் பனிமழை பெய்வதும், வெயில்காயும் பருவத்தில் வெயில் காய்வதுமாதலால், இடைநடுவில் பிரார்த்தித்தலால் பிரபஞ்ச ஒழுங்கிற்கும் காலக்கிரமத்திற்கும், காரண ஒழுங்கிற்கும் விரோதமாய் மழைக்காலத்தில் வெயிலையும், வெயிற்காலத்தில் மழையையும், சொற்பமழை பெய்கிறதென்று விசேஷ மழையையும் விசேஷமழை பெய்கிறதென்று சொற்பமழையையும் விரும்பினால் பெய்யுமோ? இன்றைய சீதோஷ்ணதிகளை விலக்கவேண்டுமானால் இவற்றின் காரணங்களா யொட்டியுள்ள இதற்குப் பின்னனவாகிய எண்ணிறந்த நாட்களின் தன்மைகளை மாற்றுதல் வேண்டுமே: அவை மாறினாலன்றி இவை மாறாவே: நடந்துவிட்ட காரியத்தை நடக்காதிருக்கப் பிரார்த்திக்கும் மௌட்டியர் ஒருவரையும் நாம் காண்கிறோமில்லை.—அதாவது இறந்து தகனம் செய்துவிடப்பெற்ற ஒருவனை இறக்காமற் செய்யும்படி கடவுளைப் பிரார்த்திப்பார் ஒருவருமில்லை. ஆயினும் அவ்விறந்தகால சம்பவத்தினையே காரணமாகப்பற்றி நடந்தேறிவரும் நிகழ்கால எதிர்கால சம்பவங்களாகிய சீதோஷ்ணதிகளை விரும்பி வருணஜெபம், அருணஜெபம் முதலியனவற்றைப் பலரும் புரிந்துவருகின்றனர். இதற்குக் காரணம் யாதெனின், அன்னோர்க்குச் சாத்திரக் கியானம் பரமாணுப் பிரமாணமேனும் இல்லாமையே. இன்னோர்க்குச் சாத்திரக்கியான மிருப்பின், இன்னின்னகாரண சம்பவங்களால் இன்னின்னபோது மழை பெய்யும், இன்னின்ன காரணத்தால் இன்னபோது மழை பெய்யாது, இன்னின்னகாரணத்தால் இன்னின்னபோது பெரு மழை பெய்யும் என்று உணர்வர். உணரவே இன்னின்னகாலம மழைபெய்யாத காலமாதலால் அவ்வக்காலத்தில மழை பெய்விக்க வேண்டுவோமேல் அதற்குமுன் இன்னின்னபோது இப்படி இப்படி நடந்த சம்பவங்களை இன்னின்னபடி மாற்றியிருத்தல் வேண்டுமென அநுமானிப்பர். அநுமானிக்கவே இறந்தகால சம்பவத்தை மாற்றலும் அதை மாற்றும்படி பிரார்த்தித்தலும் மௌட்டியமெனத் தெளிவர். தெளியவே பிரார்த்தனை செய்யார். இந்த வானசாத்திர உணர்ச்சிப்படியே பிணியாதி பீடைகளுக்கும் வழக்காதி வில்லங்கங்களுக்கும் ஏதுவாய் நடந்துள்ள காரணங்களை யுற்றுணர்வரேல் பிரார்த்தனையின் அப்பிரயோஜனத்தை நன்குணர்வர்.

பிரார்த்தனை அனுபவத்திற்கேனும் ஒத்ததா வென்பதனைப் பரியாலோசிப்பாம். சகித்தற்கரிய சங்கடங்களை சகித்தற்கும் செயற்கரிய செய்கைகளைச் செய்தற்கும் காரணமாகிய மனோதிடத்தை யுண்டாக்கவல்லது பிரார்த்தனையென்று சொல்பவர்களுடைய அனுபவத்தை இவ்விடம் குறிக்கவேண்டியது அத்தியாவசியகமாக விருக்கின்றது. யாதானும் ஓர் நம்பிக்கையால் மனோதிடம் உண்டாவது உண்மையேயெனும், அதனை நியாயவிழிகொண்டு நேர்நோக்குங்கால் அதன்பால் பரத்துவப் பிரசாதம் ஒன்றும் விளங்கவில்லை. நாம் ஆண்ணுந்து பார்த்து அகோராத்திரம் பிரார்த்தித்தாலும் அஃது மண்ணைவிட்டு விண்ணிலெழும்பப் போகின்றதில்லை. அரிய தொழிலொன்றை முடிக்கவேண்டிய காலத்தும் அரிய துன்பம் ஒன்றைச் சகிக்கவேண்டிய காலத்தும் பலமுறை பிரார்த்தித்து அங்ஙனம் பிரார்த்தித்ததனால் கடவுள் சகாயம் தனக்குண்டாயிருக்குமென்று மனோதிடங்கொண்டு அம்மனவூக்கத்தின் விசேடத்தால் ஒருவன் சித்தி யடைகின்றான்; இதுபோலவே ஓர் சுத்தவீரன் யுத்தகளத்தில் தன்னை வருத்தும்படி எதிரிகள் புரியுங்கொடுமை பலவற்றினையுஞ் சகித்துப் புறங்கொடாமல் அமர்புரியின் தப்பாமல் வெற்றி தனதேயாம் என்று முன்னிலும் பதின்மடங்கு மனோதிடங்கொண்டு முன்வைத்தகாலைப் பின்வையாது போர்புரிந்து தன் மனபிலாஷம் சம்பூரணமெய்தப் பெறுகின்றான்: இவ்விரண்டிடத்திலும் மனோதிடங் காரணமாக நின்று வலிமையை விருத்திசெய்கின்றதேயல்லாமல், பிரார்த்தித்த கடவுள் பலந்தருகின்றமையைக் காணோம். ஒருவன் மூடவைராக்கியங்கொண்டு தகாதனவற்றைச் சாதிக்க விடாமுயற்சி செய்வனேல் அவன் அக்காரியத்தை முடித்தேவிடுகின்றான். ஆகையால் மனோதிடத்தால் எது எது செய்யற்பாலதோ அதுஅதுவே மனவைராக்கியத்தாலும் பிரார்த்தனையினாலும் செய்தல் சாத்தியமாகும். ஆயினமையின் பிரார்த்தனையினிடத்து தெய்வத்துவம் விளங்கி நிற்குமென்பது அனுபவ விருத்தம். கோட்டைகளுங் கொத்தளங்களும் பட்டணங்களும் கிராமங்களும் வீடுகளும் வாயில்களும் தீப்பற்றியெரியுங் காலங்களிலும், சண்டமாருதத்தால் தாக்குண்ட மரக்கலங்கள் நிலைகலங்கி துறைதெரியாது தத்தளிக்குங் காலங்களிலும், சப்தமேகங்களும் வருஷித்து சகல நதிகளும் பிரவாகித்து கடலும் பெருகி மேலிட்ட காலங்களிலும் எத்தனை எத்தனை கோடிபேர் எத்தனை எத்தனை தெய்வங்களை நாத் தழுதழுக்கப் பிரார்த்தித்த எத்தனை எத்தனைகோடி பிரார்த்தனைகள் செவிசாற்றப்படாமல் அவலமாயின. தேசாபிமானிகளாகவும் சுத்தவீரர்களாகவும் உள்ள எத்தனையோகோடிபேர் பிரஜாநுகூலத்திற்கும் தேசாநுகூலத்திற்கும் பிரஜாரோக்கியத்திற்கும் அரசை யெதிர்த்து வாதித்து வாதித்தும், கடவுளை நோக்கிப் பிரார்த்தித்துப் பிரார்த்தித்தும் பயன்பெறாது பித்தேறி மாண்டனர். மரணாவஸ்தையைச் சகிக்கலாற்றாது "கடவுளே! கடவுளே! என் துயரினைப் போக்காயோ" வென்று கதறியழும் பரிதாபத்திற்கும் இரங்கினார் ஒருகடவுளரும் இல்லை; அவ்வாறு அழுபவனைச் சூழ்ந்துள்ள உறவினரும் ஏனையோரும் எத்தனையோகோடி பிரார்த்தனைகள்செய்து இளைத்தனர்: புருஷன்பிழைப்பானென்று மனைவியும், பிள்ளைபிழைக்குமென்று தாயும், மனைவி பிழைப்பளென்று மணாளனும் கண்டகண்ட கோயில்களுக்குக் கையெடுத்துப் பிரார்த்திக்க எத்தனையோகோடி பிரார்த்தனைகள் பிரயோஜனப்படாமல் பேரழிந்தன.

இன்னும் பிரார்த்தனையினது ஆபாசத்தை விளங்கக் காட்டுவாம் - இரண்டுபாரிசத்தார் ஒருவருக்கொருவர் நேர்விரோதமாகப் பிரார்த்திக்கின்றனர், இவர்களில் யாருடைய பிரார்த்தனையைப் பூர்த்திசெய்வது, யாருடைய பிரார்த்தனையைப் பூர்த்திசெய்யாமல் விடுவது? இரண்டு சைனியங்கள் யுத்தத்திற்குப் பிரவேசிக்கும்போது தங்கள் தங்களுக்கே வெற்றியுண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கின்றன. இவ் விருதிறவரில் வெற்றி யொருவர்பங்கே யாதல் சாத்தியமாகவும், மற்றையர் பிரார்த்தனை போகும் வழி யென்ன?

நாம் மேற்கூறிய நியாயங்களால் பிரார்த்தனையால் பிரயோசன முண்டென்றும் இல்லையென்றும் அபிமான மொழிந்து நோக்கவல்ல பரிசுத்த கியானிகளுக்கு விளங்கும். அபிமானாந்தகாரம் மனக்கண்ணை மறைத்திருந்தால் அதற்கு நாமென் செய்வோம்.

இந்துசமயசாரவிளக்கம்·

2-ம் பாகம்.

விநாயகபுராணம், தேவேந்திரன் உபாசித்தது.

(104 - வது பக்கத் தொடர்ச்சி.)

விதற்பநாட்டிற்கு அதிபதியாகிய வீமராஜனுக்கு விநாயகரது கிருபையால் புத்திரனாக உற்பவித்த உருக்குமாங்கதராஜன் தன்தந்தை உபதேசித்த ஏகாட்சரமந்திரத்தை இடைவிடாது ஜபஞ்செய்து, கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் பேரன்புடையவனாகி, அரசாண்டுவருநாளில், குடிகள் அவ்விராசனிடத்திற்குவ

ந்து, காட்டுமிருகங்கள் நாட்டுப்பயிர்களை அழிக்கிறதென்று முறையிட; அவ்வரசன் சகல பரிஜனங்களோடுஞ்சென்று பலமிருகங்களையுங்கொன்று, பின்னர்தான் தனியேசென்று, தனக்கெதிர்ப்பட்டுவருகின்ற மிருகங்களை அதஞ்செய்து வருகையில், அதிகதாகங்கொண்டு, அடுத்தவனத்தில கவிமகாமுனிவர் வாசஞ்செய்கின்ற ஆசிரமத்தையடைந்து, அவ்விடத்தில் அவர்பத்தினிமுகுந்தையென்பவள் உல்லாசமாய்த் தனியேஉலாவுவதைக்கண்டு, அவளருகிற்சென்று, அன்னையே, தாகத்திற்கு நீர்தரல்வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவள் அரசனைக்கண்டவுடன் விரகதாபங்கொண்டு, அவனுடைய தாகஇளைப்பையும் நினையாமல் தனது மோகத்தைத் தெரிவித்து அரசனுக்கெதிரில் நின்றாள். அவ்வரசன் அவளைநோக்கி, தாயே, நீரிஷிபத்தினி, என்மனது எக்காலத்தும்பரஸ்திரீகமனஞ் செய்வதில்லையென்று பலநீதிகளையும் நன்மொழிகளையும் சொல்லித்தடுத்தான். அதற்கவள் - ஸ்திரீகளுக்கு இக்கிரேதாயுகத்திலும் திரேதாயுகத்திலும் தாங்களே வலுவிற்சென்று வேறுபுருடர்களைக்கூடுவதான சுதந்தரத்தைப் பிரமன் அளித்திருக்கின்றானதலால், அச்சுதந்தரத்தினால் யான் உன்னைவலியக்கூடவந்தேன், அதனால் உனக்குப்பழிபாதகமொன்றும்நேராது, இனிமேலும் தடைசொல்லுவையாயின் நீறாகும்படி உன்னை எரித்துவிடுவேன், அல்லது உன்னழகனைத்துங்குலைந்து காட்டில் திரியும்படி சபித்துவிடுவேன், இதனைத் தீர்க்காலோசனைசெய்யக்கடவையென்று சொல்லி, அவ்வரசன்மேலேவிழுந்து மார்பைத்தழுவினாள். அவ்வரசன் பயந்து, உதறிக்கொண்டு அவளைதுஷ்டையென பலவாறுவைதுத் திரும்பிவிட்டான். பின்னர் அவள் அவனுக்குக்குட்டரோகம் உண்டாகும்படி சபித்தனள். அவ்வரசன் அம்முகுந்தைகொண்ட மோகத்தை யான் நிராகரித்துவந்தது தருமமாயிருக்க, அப்பாதகியிட்ட சாபத்தால் இப்படிப்பட்ட வியாதி உண்டாயிற்றேயென்றுதுக்கித்துக்கொண்டு இளைப்பாகி அவ்வனத்திற்றானே ஓர் ஆலமரத்தினிழலிலிருந்தான். அவனுடைய பரிசனங்களெல்லாம் அரசனைத்தேடி எங்குங்காணமல் மறுபடியும் நகரத்திற்போய்ச் சேர்ந்தார்கள்.—

இதைவாசிக்கும் நண்பர்களே, இதிலுள்ள ஆபாசங்களை எடுத்துக்கூறவும் வேண்டுமோ? முதற்கடவுளாகிய விநாயகரைப்பூசித்துவந்த அரசனுக்கு இத்துன்பம் நேர்ந்தது அநியாயமே, ஆயினும் பூர்வகர்மத்தின்பலனுயிருந்தாலென்ன செய்யலாம்! எந்த புராணத்திலும், அரசன் வேட்டைக்குச்சென்றால், அவன்தனித்துப்பிரிந்து விட்டதாகவும், அவனுடைய பரிவாரங்கள்தேடித்திரும்பிவிட்டதாகவும், சாதாரணமாய் எழுதியிருக்கிறது. சிலராவதுகூட இராமல் அரசன்தனித்துவிடுகிறதும், பரிவாரங்கள் தேடித்திரும்பிவிடுகிறதும் கிள்ளுக்கிளையாயிருக்கிறதென்று தெரியவில்லையா? சேனை வேடர்வில்லியர்முதலானபரிவாரங்கள் எத்தனைபேரோ இருப்பார்களே, பத்து கஜம் தூரத்திற்கு ஒவ்வொருவனகச் சென்றாலும், அடுத்தகாட்டிற் புகுந்த அரசனை வெகுசுலபமாய்க் கண்டுபிடித்திருக்கக்கூடுமே, பரிவாரங்கள் அரசனை எங்குங்காணமல் திரும்பி நகரம் வந்துவிடுவதென்பது எவ்வளவு ஆச்சரியம்? இக்காலத்தில் எத்தேசத்தரசனவது அவ்வாறு தப்பிப் போய்விட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறோமா? ஆதலால் வீண்கதையைவளர்த்து நிமித்தம் அவ்வாறு எழுதப்படுகிறதென்று ஸ்பஷ்டமாய்விளங்குகிறது. ஸ்திரீகளிலும் ரிஷிபத்தினியாய்விளங்கி, ரிஷியோடுகூட சதாகாலம்பழகி நற்குணநற்செய்கை யடைந்திருக்கவேண்டியவள, அதுவும் பொன்யுகமாகியமுதன்மையான கிரேதாயுகத்தில், பரபுருஷனைவிரும்பி வலுமைசெய்தனளென்றால், ஆதிமனிதர்கள் பரிசுத்தவான்களென்றும், கிரேதாயுகத்தை சத்திய யுகமென்றும் கூறுகிறமூடர்களை யென்னென்று சொல்லலாம்! ஸ்திரீ வேறுபுருஷனை வலுமைசெய்தது இங்கே தெரியவருகிறது. புருஷன் வேறு ஸ்திரீயைக் கெடுத்தது பின்னல் தெரியவரும். கிரேதாயுகத்திலும் திரேதாயுகத்திலுமாத்திரம் பரபுருஷர்களை விரும்பும்படியான சுதந்திரம் ஸ்திரீகளுக் குண்டாயிருந்த தென்பதைப்பற்றி நாம் என்னசொல்லவேண்டும்! முகுந்தையைப்போன்ற துஷ்டை சபித்துவிடுவதும், அச்சாபம் பலித்துவிடுவதும் எவ்வளவு சுலபம்! அரசன் அக்கிரமத்தைத் தடுத்தது தருமமாயிருக்க, அவனுக்குச் சாபம் பலித்ததென்பது என்ன கொடிய கதை!

பின்னர் அவ்வரசன் கணேசமூர்த்தியைத் தன்னிதயத்தில் தியானித்துக்கொண்டிருந்தான், அச்சமயத்தில் ஆகாயமார்க்கமாய் நாரதமுனிவர் செல்லக்கண்டு அவரைத் தோத்திரஞ்செய்யவே, அவர் நிலத்தில் இறங்கி அரசனெதிரில வந்தார். அவரை அவ்வரசன் வணங்கி, நடந்த விருத்தாந்தங்களைச்சொல்லி, அவ்வியாதி நீங்கும்படியான மார்க்கத்தை அருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும்; அன்பனே; உனது விதர்ப்பதேயத்தில் யான் வரும்போது, கந்தர்ப்ப நகரத்தில் ஓர் அற்புதத்தைக்கண்டேன்; அந்நகரத்திலிருக்கிற சிந்தாமணி விநாயகரைப் பலபேர் பூசனைசெய்து அவ்வவர்களிஷ்டகாமியார்த்தங்களைப் பெறுகிறார்கள். அவ்வாலயத்தெதிரில் கணேசகுண்டமென்று ஒருதீர்த்த மிருக்கிறது; குஷ்டநோயடைந்த ஒரு சூத்திரன் தீர்த்தயாத்திரை செல்லுகையில் அத்தடாகத்தை யடைந்து ஸ்நானஞ்செய்தவுடனே அவனுடைய குஷ்டநோய் நீங்கியதன்றிச் சகல வினைகளும் நீங்கப்பெற்று, தேவகணங்கள் கொண்டுவந்த விமானத்திலேறிக் கணேசலோகத்திற் போய்ச்சேர்ந்தான். ஆதலால் நீயும் அவ்விடத்திற் சென்று ஸ்நானஞ்செய்து, அவ்விநாயகமூர்த்தியைப் பூசித்துத் தான தருமங்களைச் செய்வாயாகின் இக்குஷ்டவியாதி உன்னைவிட்டு நீங்குமென்றனர். அரசன் அவ்விநாயகரைப் பிரதிஷ்டைசெய்து பூசித்தவர் யாவரோ அந்த விவரத்தை அருள்செய்யவேண்டுமென்று இரத்தலுங், நாரதர் இதனைச்சொல்லுவதாயினர்.—

குஷ்டநோய் தீர்ப்பவர் சிந்தாமணி விநாயகராதலால், அவ்வரசன் ஏகாட்சர மந்திர உபதேசம் பெற்று பூசித்துவந்த விநாயகர் வேறுமூர்த்தமாயிருக்கவேண்டும். ஒரு விநாயகருக்கிருக்கிற சக்தி வேறு விநாயகருக்கில்லைபோலும். மேலேகூறிய முகுந்தையின் துஷ்டசெய்கையினலே யுகதர்மபேதம் பாராட்டுவது மூடத்தனமென்று தோன்றுகிறது. முன்யுகங்களில் சிவன் முதலிய தேவர்களும் முனிவர்களும் கந்தர்வர் முதலானவர்களும் ஆகாயத்திற் பறந்ததுபோல இந்தயுகத்தில் பறவாமையாலும், விநாயகரைப் பூசித்த அவரவரும் இஷ்டசித்தியை அடைந்தாரென்றதனால் ஈஸ்வரனுடைய நிர்னயம் இல்லாமற்போவதினாலும், "இட்டமுடனென்றலையி லின்னபடியென்றெழுதி, விட்ட சிவனுஞ் செத்துவிட்டானோ" என்கிற வினவற, அவர்களெல்லோரும் பூண்டற்றுப்போனார்களென்று தெரியவருகிறது. விநாயகபூசை செய்கிற அவ் வரசனுடைய நகரத்திலிருந்த சிந்தாமணி விநாயகருடைய மகிமையை அவன் அதுவரையில் அறியாதிருந்தது அதிசயமே. மேலே ஒரு சூத்திரனுடைய விர்த்தாந்தத்தினல், 'சூட்சத்திலிருக்கிறது மோட்சம்' என்றபடி மோட்சமடைவது வெகு சுலபமென்று தெரியவருகிறது. அந்த சூட்சந்தெரியாமலே இக்காலத்து மதஸ்தர்கள் நரகலோகத்தை வீணய் நிரப்பிவிடுகிறார்கள்போலு

(இன்னும்வரு

பிள்ளையார்பிடிக்கக் குரங்கான து

என்நாட்டவரும் பொன்னுடெனக் கருதுந் தெ
ண் சாரங்கபாணி சக்கரபாணியென்னுந் திரு ந
பெற்று மிகு மகிமை விளங்காநின்ற விரண்
தேவாலயமுள. அவ்விரண்டு தேவாலயங்க
ளுமன்று, விஷ்ணுவாலயங்களுமன்று.
ரகங்கள் சமண விக்கிரகங்களைப்போ வி
திருக்கையில், இறந்துபோன

டதுபோல, இந்நாட்டிலிருந்த வைணவர்களும் சைவர்களுமேற்பட்டு, அவ்விஷயமாக வாதம்நேர்ந்து, பார்ப்பான்வீட்டுத் திண்ணைக்குப் பரதேசிகள் அடித்துக்கொள்வதுபோல, வைணவர்கள் தங்களுடையதென்றும் சைவர்கள் தங்களுடையதென்றும் அடித்துக்கொண்டிருந்தனர். ஓர்காலத்து தென்றல் முற்றிப் பெருங்காற்றானதுபோல், கலக மதிகரித்ததனால், அவ்வூர் நியாயாதிபதி யவ்விருசமயிகளையும் வருவித்து யாதுநிமித்தம் நீவிர் போர்புரிகின்றீர்களென சைவர்களுக்குள் தலைவராய் மடத்தம்பிரானெழுந்து இவ்விரண்டாலயங்களும் சிவஸ்தலங்களே. இதோ அப்பர் பதிகங்க ளிருக்கின்றன பாருங்கள். சம்பந்தர் பதிகங்களிருக்கின்றன பாருங்கள். இதோ ஸ்தல புராண மிருக்கிறது பாருங்களென்றுகூறி, 'வெட்கம்போனால் போகிறது, தொப்பை நிரப்பினால் போதும்' என்பதுபோல சிவஸ்தலமேயென்று உறுதிமொழி பகர்ந்தனர். வைணவர்களும் அவ்வாறே செப்பி நின்றனர். நியாயாதிபதி யிருதிறத்தவர்களுடைய சொற்களைக்கேட்டு நெடுநேரம் சிந்தித்து நீவிர் இவ்வாறு கூறுகின்றமையான் அவரவர் கடவுளருக்குரிய சின்னங்களை யவ்வாலயத்திற் காண்பித்தாலன்றித் தீர்மானங் கூறப்படாதென்று செப்பினர். சைவர்கள் தங்களுக்குள் ஓர் முடிவுசெய்துகொண்டு தங்கள் வீட்டினின்று ஓர் பிள்ளையாரைக் கொடுபோய் திருக்குளத்தின் மூலையில் நீரிலமிழ்த்தி வைத்தனர். இச்சூதை யோர்ந்த வைணவர் பிள்ளையாரை யகற்றி யவ்விடத்தி லனுமாரை வைத்தனர். மறுநாள் சைவர்கள் அம்பலத்திற்குச்சென்று திருக்குளத்தைச் சோதிக்கில் எங்கள் கடவுளருக்குரிய சின்னங் காணலாமென்றனர். நியாயாதிபதி யவ்வாறே சோதித்து அனுமாரிருக்கக் கண்டமையால் வைணவர்பட்சம் தீர்மானமளித்தனர். இதைக்கண்ணுற்ற சைவர்கள் பிள்ளையார்பிடிக்கக் குரங்காயிற்றே யென்றார்கள். அதே யிக்காலத்தும் பழமொழியாய் வழங்கிவருகின்றது. நண்பர்களே! இவ்வாலய மகிமையைப் பாருமின்! அவற்றி னுண்மையை யோருமின்.

வர்த்தமானசங்கிரகம்.

B. I. கம்பேனி யாரின் கப்பல்களில் மிகவும் பெரிதாகிய ஜம்னு என்பது தீபிடித்ததாக ஏடனிலிருந்து வந்த தந்திசமாசாரத்தால் தெரியவருகிறது. அந்தக் கப்பல் தானியம்-காப்பிக்கொட்டை-எண்ணெய்-தோல் முதலிய பல சரக்குகளையேற்றிக்கொண்டு சென்ற ஸ்ரீ 3உ கொழும்பிலிருந்து போயிற்று. அந்தக்கப்பல் ஏடனுக்குப்போய்ச் சேருவதற்கு முன்னமே 3 நாள் எரிந்துகொண்டிருந்து, சமாச்சாரம் அனுப்பப்படும்போதும் ஏடன்கப்பற்றுறையில் அதிலுள்ள சரக்குகள் எரிந்து கொண்டிருந்ததாம். மனிதருக்குத் துன்பமாவது பிராணச் சேதமாவது நேரிட்டதாக ஒன்றுஞ் சொல்லப்படவில்லை. கொழும்பிலிருந்து அதில் ஏறிப்போன பயணக்காரர் மிஸ்டர் அந்தரூ என்பவர் ஒருவரே.

மின்சார ஊஷ்ணமானது கடைசியாய் முட்டைகளைக் குஞ்சு பொரிப்பிக்க உபயோகிக்கப்படுகிறது. இதைக்கண்டறிந்தவர் ஒநாஷிபன். இது செயற்கை ஊஷ்ணத்தினால் முட்டைகளைப் பொரிப்பிப்பதற்கான மற்ற சூழ்ச்சிகளைப்பார்க்கிலும் மிகவும் சிறந்ததாம். இதனால் உண்டாக்கப்பட்ட ஊஷ்ணம் இடைவிடாது ஒரே நிதானமாயிருக்கிற தென்றும், தீர்க்க காலத்திற்கு ஒரேநிதானமான ஊஷ்ணம் வேண்டியிருக்கிற மற்றும் அநேககாரியங்களுக்கு பிரயோசனகரமாய் உபயோகிக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

பொம்பாய் சிலம்பக்கூட கட்டடத்திற்காக கவரன்மென்டார் (கோட்டை) மைதானவெளியில் இனாமாய நிலங்கொடுக்கிறபட்சத்தில், அந்தக்கட்டட நிதிக்காக தாமும் ரூ 10,000 கொடுக்கிறதாய் ஸர் டின்ஷா மனக்ஜீ பெட்டிட் அவர்கள்சொல்லியிருக்கிறார்கள்.

பிரான்சிலே ஒரு புதுமோஸ்தரான மணிகடியாரம் நவீனமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. அதினுடைய டயல்தகடு தோற் கடுதாசியினால் செய்யப்பட்டு பூமாலை சித்திரித்திருக்கிறது. இந்தப்புஷ்பங்களிலே இரண்டு தேன்வண்டுகளைக் காணலாம். அவை ஒரு புஷ்பத்திலிருந்து மற்றொருபுஷ்பத்திற்குக் குதிக்கின்றன; அவற்றில் ஒன்று ஒரு மணிநேரத்தில் அந்தத் தகட்படிச்சுற்றிவர, மற்றொன்று பன்னிரண்டு மணிநேரத்தில் த்தல்வருகின்றது. அந்தத் தகட்டில் சந்து ஒன்றுமில்லை; அகால சம்மாரத்தின் உட்கருவிகளோடு யாதொரு சம்பந்தமு மிதலும் மேஅந்த வண்டுகள் எப்படி நகர்ந்துவருகிறதோ அதை செய்யார். மாட்டாமல் அநேகர் மயங்குகிறார்கள். அந்தத் பீடைகளுக்குற்புறத்திற்கடியிலே சாதாரணமான இரண்டு சந்துள்ள காரணகளிருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் காபினையோஜனத்து அந்த வண்டுகள் இலேசான எழுகால் செ
பிரார்த்தனை அனுல், அவை அநதத் தோல் தகட்டின் உட்புறரியாலோசிப்பாம். தென்படாத காந்தக்கற்கள் செல்லுகிற போகின்றன.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுவக்கியாளிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு	—ரூ	3— 0—0
வெளி ,, ,,	—ரூ	1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs	A.	P.	
மாசம்	1-க்கு	0	4	0	முன்பணஞ்செலுத்தவேண்டு
ஷை	3-க்கு	0	10	0	ம். சந்தாவோடுகூட, இந்தி
ஷை	6-க்கு	1	2	0	யாவிலும் பர்மாவிலு முள்ள

வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

கையொப்பநேயருக்கு.

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறாதவர்கள் உடனே தெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

பத்திரிகைக்கு எழுதும்கடிதமுதலியவிஷயங்களை
மாத்திரம்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கு
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.